**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**

முன்னிலை: திரு. அ.செல்வகுமார், பி.இ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

2021ம் ஆண்டு மார்ச் மாதம் 06-ம் நாள் சனிக்கிழமை

<u>அசல் வழக்கு எண்.12/2019</u>

1. கோவிந்தராஜ்
2. சக்திவேல்
3. சீனிவாசன் ... வாதிகள்

(எதிராக)

1. வி. சக்திவேல்
2. வேலாயுதம் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 08.02.2019-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் 16.02.2021-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M . ஜெயபாலன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. A. சந்திரன் மற்றும் திரு. G. கேசவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததாலும் அவர்களை தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும்,

அது சமயம் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாதிகள் தரப்பு வாதங்களை கேட்டும் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

## <u>தீ ர் ப் பு ரை</u>

1. வாதிகள் இவ்வழக்கை வழக்குச் சொத்துக்களை பொறுத்து 1-ம் பிரதிவாதி பெயரிலான 24.4.2009ம் தேதியிட்ட ஊத்தங்கரை சார்பதிவக ஆவண எண். 1043/2009-ன் தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என விளம்புகை செய்யவும், வழக்கு 1, 2 இனச் சொத்துக்களில் வாதிகளின் நிம்மதியான சுவாதீனத்திற்கும் அனுபவத்திற்கும் பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும் தாக்கல் செய்துள்ளனர்.

**2. <u>வழக்குரையின் சுருக்கம்:</u>**

வழக்கு புல எண்.644-ல் உள்ள மொத்த நிலமும் ஆதியில் பெருமாள் எனபவருக்கு கிரயப்படி பாத்தியப்பட்டு அவருடைய பிள்ளைகள் கோபால் குழந்தை ஆகியோருக்கு ¾ பங்கும் செங்கோட்டானுக்கு ¼ பங்கும் வாய்மொழியாக பிரித்துக் கொடுத்தார் என்றும், அதில் ¾ பங்கு சொத்தினை ஒரு முத்துகவுண்டருக்கு மூவரும் சேர்ந்து 02.02.1956-ம் தேதியில் கிரயம் செய்து கொடுத்தனர் என்றும், 09.02.1956-ம் தேதியில் மீதமிருந்த ¼ பங்கு சொத்தை முத்துகவுண்டருக்கு செங்கோட்டான் கிரயம் செய்து சுவாதீனம் ஒப்படைத்ததாகவும், மேற்படி முத்துகவுண்டரும்

ஆரிமுத்துகவுண்டரும் சகோதரர்கள் என்றும், இருவரும் கூட்டுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சுமார் 40 ஏக்கர் நிலத்தோடு மேற்படி கிரயச்சொத்துக்களையும் கூட்டாக அனுபவித்து வந்ததாகவும், முத்துகவுண்டருக்கு 2 மனைவிகள் என்றும், முதல் மனைவிக்கு பச்சியப்பன், குப்பம்மாள் ஆகியோர் பிள்ளைகள் என்றும், 2வது மனைவி சென்னியம்மாள் மூலம் 1-ம் வாதி கோவிந்தராஜ், பாஞ்சாலை, லட்சுமி, விஜயா ஆகியோர் பிள்ளைகள் என்றும், ஆரிமுத்து கவுண்டருக்கு 2ம் வாதி சக்திவேல், 3-ம் வாதி சீனிவாசன், சத்தியவாணி ஆகியோர் பிள்ளைகள் என்றும், மேற்படி புல எண்.644-ல் உள்ள 3.79 ஏக்கர் சொத்தினையும் மேலும் இருந்த 40 ஏக்கர் சொத்தினையும் முத்துகவுண்டரும் ஆரிமுத்துகவுண்டரும் 1995-ம் ஆண்டு வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொண்டனர் என்றும், அது வழக்கு புல எண்ணில் 2/3 பங்கு ஆரிமுத்துகவுண்டருக்கும், 1/3 பங்கு முத்துகவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது என்றும் கூறியுள்ளனர்.

3. வாய்மொழிபாகம் பிரித்துக் கொண்ட அடுத்த ஆண்டே ஆரிமுத்துகவுண்டர் மற்றும் முத்துக்கவுண்டர் குடும்பத்திற்கு வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்றும், அதில் தாவா சொத்துக்களை முத்துகவுண்டருக்கு வந்த 1/3 பங்கு 1ம் வாதி கோவிந்தராஜிக்கும், ஆரிமுத்துகவுண்டர் பாகத்திற்கு வந்த 2/3 பங்கு 2-ம் வாதி சக்திவேலுக்கு 1/3 பங்கும், 3-ம் வாதி சினிவாசனுக்கு 1/3 பங்கும் ஒதுக்கப்பட்டதென்றும், அந்த நிலத்தில் தெற்கு பக்கம் 3-ம் வாதிக்கும், நடுவில் 2-ம் வாதிக்கும், வடக்கு பக்கம் 1-ம் வாதிக்கும் ஒதுக்கப்பட்டதாகவும், மேற்படி பாகச் சொத்துக்களை வாதிகள் முழு உரிமையுடனும் பாத்தியத்துடனும் ஆண்டு அனுபவித்து வருகிறார் என்றும், அதில் ஆரிமுத்துகவுண்டர் முத்துகவுண்டரின் வாரிசுகள் குறித்து எந்த பிரச்சனையும் இல்லை என்றும், மேற்படி புல எண்ணை

பொறுத்து நில வுடமை மேம்பாட்டு திட்டதின்பொழுது முத்துகவுண்டர் பெயரில் உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி உட்பிரிவுகள் 644/1, 644/2, மற்றும் 644/3 ஆகியவை பட்டா எண்.812-ன் படி முத்துகவுண்டர் பெயரில் இருந்து வருவதாகவும், அந்த கிரயச் சொத்தில் ஒரு பகுதி மழைக்காலங்களில் மழைநீர் செல்லும் ஓணியாக இருந்து வருகிறது என்றும், அதை ஒட்டி தெற்கு பக்கத்தில் நிலம் உடைய நீலா (எ) லீலா மேற்படி சொத்தில் ஒரு பகுதியில் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார் என்றும், எந்த ஆவணங்களும் இல்லாமலேயே அவர் பெயரில் புல எண்.644/4க்கு தவறான பட்டா வழங்கப்பட்டுள்ளதென்றும், அதனை வைத்துகொண்டு அசல் வழக்கு எண்.80/2008 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து வண்டிப்பாதையை ஆக்கிரமித்துள்ளதாகவும், அதை அகற்றும்படியும் பரிகாரம் கோரியிருந்த நிலையில் அந்த வழக்கு 17.4.2013ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டதென்றும், அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருந்தாலும் நீலா (எ) லீலாவிற்கு எந்த உரிமையும் இல்லை என்றும், அவரை ஆக்கிரமிப்பாளராக இருந்து வருகிறார் என்றும், தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லாத நிலையில் 1-ம் பிரதிவாதி பெயரில் 2-ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் எழுதிவைக்க உரிமையும் அனுபவமும் இல்லை என்றும், முத்துகவுண்டருக்கு கோபாலும், குழந்தையும் சேர்ந்து 02.02.1956-ம் தேதியில் ¾ பங்கு சொத்தினை கிரயம் செய்துவிட்ட நிலையில் மீதி ¼ பங்கு சொத்தினை செங்கோடன் 09.02.1956-ம் தேதியில் கிரயம் செய்து விட்ட நிலையில் பெருமாளின் பிள்ளைகளுக்கு புல எண்.644-ல் எந்த உரிமையும் இல்லை என்றும், 2-ம் பிரதிவாதி மேற்படி கோபாலின் மகன் என்ற உரிமையில் அவருக்கு வாரிசுரிமைப்படி பாத்தியப்பட்டதாக மோசடியாக 24.4.2009-ம் தேதியில் 1-ம் பிரதிவாதி பெயரில் ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணம் தயார்

செய்துள்ளார், அது சட்டப்படி செல்லாத ஆவணம் என்றும், அந்த ஆவணத்தை வைத்துக்கொண்டு 1-ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.32/2018 என்ற எண்ணில் உரிமை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், அது நிலுவையில் இருந்து வருவதாகவும், வழக்குச் சொத்துக்களில் வாதிகளுக்குள்ள உரிமையை அந்த ஆவணம் எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும், 1-ம் பிரதிவாதி தற்போது மோசடியான பராதீனங்களில் ஈடுபட முயற்சித்து வருகிறார் என்றும், மேற்படி ஆவணத்தை வைத்துக்கொண்டு வாதிகளின் நிம்மதியான சுவாதீனத்திற்கு தொந்தரவு செய்து வருவதாகவும், கடந்த 10.01.2019-ம் தேதியில் பிரதிவாதிகளும் அவரது ஆட்களும் வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்ய முயற்சிப்பதை மிகுந்த சிரமத்திற்கிடையே தடுத்து நிறுத்தியதாகவும், மீண்டும் அதிகப்படியான ஆட்களை வைத்து வழக்குச் சொத்துக்களை கைப்பற்றப் போவதாகவும், பராதீனம் செய்வதாகவும் மிரட்டிச் சென்றதாகவும், அதனால் மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என விளம்புகை கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறுகின்றனர்.

4. இவ்வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகியும் போதுமான வாய்ப்பளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5. வாதிகள் தரப்பில், வா.சா.1 விசாரணை செய்து வா.சா.ஆ.1 முதல் வ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்யப்பட்டது.

6. வாதிகள் தரப்பில் 2-ம் வாதியை வா.சா.1 ஆக விசாரித்து 06.07.2020ம் தேதியில் பெருமாள் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை வைத்து பார்க்கும்பொழுது புல எண். 644-ல் 3.79 ஏக்கர் நிலம் பெருமாள் பெயருக்கு கிரயம் செய்துகொடுக்கப்பட்டதாக காணப்படுகிறது. வா.சா.ஆ.2 ஆக 06.02.1956ம் ஆண்டு முத்துகவுண்டர் பெயரில் பெருமாள் மக்கள் கோபால் மற்றும் குழந்தை ஆகியோர் எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தில் புல எண்.644-ல் உள்ள 3.79 ஏக்கர் நிலத்தில் பொதுவில் முக்கால் பங்கு நிலத்தை கிரயம் செய்ததாக காணப்படுகிறது. வா.சா.ஆ.3 -ஐ பார்க்கும்பொழுது அதே முத்துகவுண்டருக்கு 09.02.1956ம் தேதியில் பெருமாள் மகன் செங்கோடன் புல எண்.644-ல் உள்ள 3.79 ஏக்கர் நிலத்தில் பொதுவில் 4-ல் 1 பங்கு கிரயம் செய்ததாக காணப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் படி புல எண்.644-ல் உள்ள மொத்த சொத்தையும் முத்துகவுண்டர் கிரயம் பெற்றார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

7. வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள முத்துகவுண்டரின் பெயரிலுள்ள பட்டாவை பார்க்கும்பொழுது புல எண்.644/1, புல எண்.644/2 மற்றும் புல எண்.644/3 ஆகியவை அந்த பட்டாவில் காணப்படுகிறது.

8. வா.சா.ஆ.5 ஆக நீலா (எ) லீலா என்பவர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.80/2008-ன் தீர்ப்பாணை நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் முத்துகவுண்டரின் மனைவி சென்னியம்மாள், முத்துகவுணடரின் மகன் பச்சியப்பன், முத்துகவுண்டரின் மகன் கோவிந்தராஜ் அதாவது இவ்வழக்கின் 1-ம்

வாதி, அண்ணாமலை என்பவரின் மகன் கெவரன், மண்ணுகான் (எ) சின்னத்தம்பியின் மகன் அண்ணாதுரை ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்து அதில் 1 முதல் 3 பிரதிவாதிகள் வண்டிப்பாதையில் ஆக்கிமிப்பு செய்ததாகவும், அதை அகற்ற வாதிக்கு சுவாதீனம் ஒப்படைக்கவும், தவறும் பட்சத்தில் நீதமன்றம் மூலம் சுவாதீனம் பெறவும், வாதியின் உரிமையை விளம்புகை செய்யவும், மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைக்காகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் சொத்து விவரமாக புல எண்.644-ல் 2 ஏர்ஸ் அளவிற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 17.4.2013-ம் தேதியில் வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டதாக காணப்படுகிறது.

9. வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.6 அசல் வழக்கு எண்.32/2018ன் வழக்குரையின் நகலாகும். அதில் வழக்கின் வாதிகள் 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்படி வழக்குரையில் வழக்குச் சொத்தாக புல எண்.644/1 முதல் புல எண்.644/4 வரை அனைத்து சொத்துக்களை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்படி சக்திவேலுக்கு 24.4.2009ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணப்படி பாத்தியப்பட்டதாக விளம்புகை கோரப்பட்டுள்ளது. அதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 ஆன எதிர் வழக்குரையில் இவ்வழக்கில் கூறப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும் கூறப்பட்டுள்ளன.

10. வா.சா.ஆ.8 ஆக 1ம் பிரதிவாதி பெயரில் 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 2-ம் பிரதிவாதிக்கு ஆவண எண்.637/1920ன் படி பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு,

அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு அவரது தந்தை கோபாலுக்கு பாத்தியப்பட்டு, அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு 2-ம் பிரதிவாதிக்கு பிதுரார்ஜிதமாக பாத்தியப்பட்டதாக காணப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் சொத்து விவரமாக புல எண்.644/1 முதல் 644/4 வரையில் குறியீடு செய்யப்பட்டு செட்டில் மெண்ட் செய்யப்பட்டுள்ளது. வ.சா.ஆ.9 ஆக அசல் வழக்கு எண்.32/2018 11.11.2019ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான தீர்ப்பாணையின் நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. இவ்வழக்கின் வாதிகள் வழக்குச் சொத்துக்கள் முழுவதும் முத்துகவுண்டருக்கு வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3-ல் கிரயம் பெற்றதன் படி முழுமையாக பாத்தியப்பட்டன என்பது மேற்படி ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. புல எண்.644/1 முதல் 644/3 வரையிலான பட்டாவும் உறுதிசெய்கின்றன. புல எண்.644/4 -ஐ பொறுத்து பட்டா முத்துகவுண்டர் பெயரில் இல்லாவிட்டாலும் அந்த உட்பிரிவை பொறுத்தவரை நீலா (எ) லீலா தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்தது குறித்து ஏற்கனவே ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளதால் அதில் அவருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபித்துக்கொள்ள அவர் முன்வரவில்லை என்பது எளிதில் விளங்குகிறது.

12. ஏற்கனவே மேற்படி புல எண்ணில் உள்ள முக்கால் பாக சொத்தை கோபால் என்பவரும் குழந்தை என்பவரும் 02.02.1956ம் தேதியில் கிரயம் செய்துவிட்ட நிலையில் 09.02.1956ம் தேதியில் செங்கோடன் கால் பாகத்தை கிரயம் செய்துவிட்ட நிலையிலும் 2-ம் பிரதிவாதிக்கு வாரிசு என்ற அடிப்படையில் பாத்தியம் ஏற்பட்டதாக கூறுவது ஏற்பதற்கில்லை. அதனால் பெருமாள் பெயரில் ஏற்பட்ட கிரய

ஆவணத்தை வைத்து ஏற்படுத்தியுள்ள வா.சா.ஆ.8 தான செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியானது என்று முடிவு செய்யப்படுகிறது. அதே போல் அந்த ஆவணத்தை வைத்துகொண்டு பிரதிவாதிகள் பல்வேறு பராதீனங்கள் செய்ய முயற்சிப்பதாகவும், அதை தடுக்கும் விதத்தில் உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிகள் கோருகின்றனர்.

13. முதல் நோக்கு வழக்கும் எஞ்சியிருக்கும் சமநிலை வாய்ப்பும் வாதிகள் பக்கமே உள்ளதால் அவர்களுக்கு உறுத்துக்கட்டளை வழங்காவிடில் நிறையீடு செய்ய முடியாத இழப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது ஆகவே வாதிகள் கோரியுள்ளபடி விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

**14. முடிவாக, வாதிகளின் வழக்குச் சொத்துக்களை பொறுத்து 1-ம் பிரதிவாதி பெயரிலான 24.4.2009ம் தேதியிட்ட ஊத்தங்கரை சார்பதிவக ஆவண எண். 1043/2009-ன் தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என விளம்புகை செய்தும், வழக்கு 1, 2ம் இன சொத்துக்களில் வாதிகளின் நிம்மதியான சுவாதீனத்திற்கும் அனுபவத்திற்கும் பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும் செலவுத்தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கி சரி செய்யப்பட்டு 2021ம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம்

நாளான இன்று அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-திரு. அ.செல்வகுமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.

**இணைப்பு**

**வாதிகள் தரப்பு சாட்சி:**

வா.சா.1 - திரு. சக்திவேல்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

வா.சா.ஆ.1 - 06.07.1920ம் தேதியிட்ட பெருமாள் பெயரில் ஏற்பட்ட கிரயப்பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.2 - 02.02.1956ம் தேதியிட்ட முத்துகவுண்டர் பெயரில் ஏற்பட்ட கிரயப்பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.3 - 09.02.1956ம் தேதியிட்ட முத்துகவுண்டர் பெயரில் ஏற்பட்ட கிரயப்பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.4 - வழக்குச் சொத்துக்களை பொறுத்து முத்துகவுண்டர் பெயரில் உள்ள கணினி பட்டா ( பட்டா எண்.812)

வா.சா.ஆ.5 - அசல் வழக்கு எண்.80/2008ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையின் நகல்

வா.சா.ஆ.6 - அசல் வழக்கு எண்.32/2018-ன் பிராதின் நகல்

வா.சா.ஆ.7 - அசல் வழக்கு எண்.32/2018-ல் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் நகல்

வா.சா.ஆ.8 - 24.04.2009ம் தேதியில் 1-ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.9 - 11.11.2019-ம் தேதியில் அசல் வழக்கு எண்.32/2018-ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:** இல்லை.

ஒம்/-திரு. அ.செல்வகுமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.

<u>சீரான தீர்ப்புரை</u>
அசல்வழக்கு எண்.12/2019
நாள்: 06.03.2021